வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

இந்தியாவின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபாய் படேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டா ஆகியோரின் 150ஆவது பிறந்தநாளை தேசிய அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் பெட்ரோபோலில் அமைந்துள்ள துறைமுகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் முனைய கட்டடத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று திறந்து வைத்தார்.

இந்திய ராணுவத்தின் 78ஆவது காலாட்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தையொட்டி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தியா மீதான நம்பிக்கை உலக நாடுகளில் அதிகரித்து வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் -1 (19)

இந்தியாவின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லப்பாய் படேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டா ஆகியோரின் 150ஆவது பிறந்தநாளை தேசிய அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றினார். இந்த மகா நாயகர்கள் தொடர்பான கருத்துக்களை #sardar150 #BirsaMunda என்ற Hashtag-களில் பதிவு செய்து அவர்களின் பெருமைகளை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அனிமேஷன் செய்யப்பட்ட கதாபாத்திரங்கள், திரைப்படங்கள் உள்ளிட்டவை அதன் சிறப்பு அம்சம் காரணமாக உலகெங்கிலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

சோட்டா பீம், கிருஷ்ணா, ஹனுமான், மோட்டு-பட்லு உள்ளிட்ட அனிமேஷன் தொடர்கள் உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்தியாவின் இணையதள விளையாட்டுகள் சர்வதேச அளவில் மிகவும் பிரபலமடைந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். வெளிநாட்டு இணையதள விளையாட்டுகளிலும், இந்தியர்களின் திறன் மற்றும் கற்பனை குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்குவதாக பிரதமர் தெரிவித்தார்.

மனதின் குரல் -2 (17)

இதன் மூலம் அனிமேஷன் உலகில் இந்தியா புதிய புரட்சியை படைக்கும் பாதையில் பயணிப்பதாக கூறினார். அனிமேஷன் துறை இன்று எப்படிப்பட்ட துறையாக மாறிவிட்டது என்றால் பிற துறைகளுக்கு அது பலமூட்டி வருகிறது என்றார். எடுத்துக்காட்டாக we are tourism மிகவும் பிரபலமாகி வருகிறது. நீங்கள் மெய்நிகர் சுற்றுலா வாயிலாக அஜந்தாவின் குகைகள் முதல் வாரணாசியின் எழில் கொஞ்சும் பகுதிகளை சுற்றுலாவாக செல்ல முடியும் என்று கூறினார்.

நாளை அக்டோபர் 28ஆம் தேதி, அனிமேஷன் தினமாக கொண்டாடப்பட உள்ள நிலையில், நாம் அனைவரும் உலகின் அனிமேஷன் ஆற்றல் மையமாக பாரதத்தை மாற்ற உறுதிப்பாட்டை ஏற்போம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்சார்பு என்ற மத்திய அரசின் கொள்கை தற்போது மக்கள் இயக்கமாக மாறி இருப்பதாகவும், மாறி வரும் உலகில் அனைத்து துறைகளிலும் அற்புதங்களை அரங்கேற்றி வருவதாகவும், பிரதமர் தெரிவித்தார். செல்பேசிகளை இறக்குமதி செய்துவந்த இந்தியா இன்று உலகின் மிகப் பெரிய செல்பேசி தயாரிப்பாளராக மாறி இருப்பதாக தெரிவித்தார்.

நிலவின் தென் துருவத்தில் லேண்டர் தரையிறங்கிய முதல் தேசமாக இந்தியா இன்று அறியப்படுவதையும், பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மனதின் குரல் -3 (17)

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கி MACE லடாக்கில் 4 ஆயிரத்து 300 மீட்டர் உயரத்தில் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சுய சார்பு இந்தியா மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான உதாரணங்களை சமூக ஊடகங்களில் நேயர்கள் பகிர்ந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். இந்தியாவில் தயாரிப்போம் என்ற வாசகத்தை, உலகிற்காக தயாரிப்போம் என்ற நிலைக்கு உருமாற்றி இருப்பதாகவும், அனைத்து குடிமக்களும் புதுமைகளை படைப்போராக மாறி இருப்பதாகவும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

டிஜிட்டல் கைது குறித்து பேசிய பிரதமர், நீங்கள் பயன்படுத்தும் செல்போன் எண்மீது குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கூறி, சைபர் குற்றத்தில் ஈடுபடுவோரின் வார்த்தைகளை கண்டு நாம் அச்சப்படத் தேவையில்லை என்றும் குற்றவாளிகள் பாதிக்கப் பட்டவர்களுக்கு உளவியல் ரீதியாக தாங்கமுடியாத அளவிற்கு அழுத்தத்தை ஏற்படுத்துவார்கள் என்றார். இது போன்ற அழைப்புகள் உங்களுக்கு வந்தால் நிதானத்தை கையாளுதல், சிந்தித்தல், செயல்படுதல் என்ற மூன்று நிலைகளை கையாள வேண்டும் என்றும், முடிந்தால் ScreenShot செய்து உரையாடலை ஒலிப்பதிவு செய்யுமாறும் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

மனதின் குரல் - 4 (20)

மேலும் தேசிய சைபர் உதவி எண்ணான 1930 என்ற எண்ணோடு தொடர்பு கொண்டு cybercrime.gov.in என்ற இணையத்திற்கு சென்று புகார் தெரிவிக்க வேண்டும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். இத்தகைய மோசடி நபர்களை பிடிக்க அனைத்து புலனாய்வு அமைப்புகளும் மாநில அரசுகளோடு இணைந்து செயல்பட்டு வருவதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். மோசடி குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த #SafeDigitalIndia என்ற இணையத்தை பயன்படுத்தலாம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் சைபர் மோசடிக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் இத்தகைய முயற்சிகள் வாயிலாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார். பண்டிகைகளின் இந்த காலக் கட்டத்தில் நாம் அனைவரும் தற்சார்பு பாரதம் என்ற இயக்கத்தை மேலும் பலமடையச் செய்வோம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பண்டிகைகளில் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஃபிட் இந்தியா அதாவது உடலுறுதியான இந்தியா என்ற இந்த உணர்வு இப்போது ஒரு மக்கள் இயக்கமாக மாறி வருகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். தற்போது அருகில் இருக்கும் பூங்காக்களில் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதை காண முடிகிறது. பூங்காக்களில் நடைபயிலும் முதியோர், இளைஞர்கள் மற்றும் யோகக் கலையில் ஈடுபட்டு வரும் குடும்பங்கள் அதிகரித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மனதின் குரல் - 5 (11)

நீங்களும் கூட உங்களுடைய உடலுறுதி தொடர்பான அனுபவங்களை #fitindia என்ற சமூக ஊடகத்தில் கண்டிப்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த முறை சர்தார் வல்லப்பாய் படேலின் பிறந்த நாளன்று தீபாவளி பண்டிகை வருவதால், வருடம் தோறும் நடைபெறும் தேச ஒற்றுமை ஓட்டம் இந்த முறை முன்னதாக 29ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று இந்த ஒற்றுமை ஓட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்த ஓட்டத்தில் அதிக அளவில் மக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இது பண்டிகை காலம் என்பதால் தீபாவளி, சட்பூஜை, குருநானக் பிறந்தநாள் மற்றும் அனைத்து திருநாட்களுக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

அமித் ஷா (8)

மேற்கு வங்க மாநிலத்தில் இந்திய – வங்கதேச எல்லையில் அமைந்துள்ள பெட்ரோபோலில் அமைந்துள்ள துறைமுகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் முனைய கட்டடத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று திறந்து வைத்தார். பர்கானாஸ் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த பெட்ரோபோல் துறைமுகம்

தெற்காசியாவின் மிகப்பெரிய தரை துறைமுகமாகும். இந்த துறைமுகம் இந்திய – வங்கதேச எல்லையில் அமைந்துள்ளது. இது நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாக உள்ளது.

காலாட்படை தினம் (7)

இந்திய ராணுவத்தின் 78ஆவது காலாட்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய காலாட்படை வீரர்களின் துணிச்சல், தியாகம், தன்னலமற்ற சேவை நம் ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதாக தெரிவித்துள்ளார். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் பாதுகாப்பில் காலாட்படை வீரர்கள் முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (9)

இந்தியா மீதான நம்பிக்கை உலக நாடுகளில் அதிகரித்து வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பெருமிதம் தெரிவித்துள்ளார். புனேயில் நேற்று நடைபெற்ற உலக அளவில் எழும் வாய்ப்புகள் குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், சாலை, ரயில்வே, மெட்ரோ ரயில் போன்ற குறிப்பிடத்தக்க அளவிலான கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்கள், அன்னிய முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து வருகிறது என்று

கூறினார். இது தவிர சந்திரயான் மற்றும் கோவிட் தடுப்பூசி போன்ற இந்தியாவின் முன் முயற்சிகள் பிரிக்ஸ், குவாட் போன்ற சர்வதேச அரங்குகளில் இந்தியா மீதான நம்பிக்கையை அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜிதேந்திர சிங் -1 (15)

வரும் 2035ஆம் ஆண்டில் விண்ணில் இந்தியாவின் விண்வெளி நிலையம் அமைக்கப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நேற்று உயிரி தொழில்நுட்பத்துறை மற்றும் இஸ்ரோ இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியாவில் விண்வெளித்துறை அதி வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாகத் தெரிவித்தார். இது மேலும் வளர்ச்சியடைய அரசு மற்றும் தனியார் பங்களிப்பு அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இத்துறையில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் அவர் கூறினார். தற்போது இந்தியாவில் விண்வெளி பொருளாதாரத்தை பொருத்தவரை 300 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தங்களது பங்களிப்பை செலுத்தி வருவதாக அவர் கூறினார். குறிப்பாக மனிதகுல சுகாதாரம் சார்ந்த ஆராய்ச்சி, மருந்து, உயிரிப்பொருள் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட கழிவு மேலாண்மை

மற்றும் மறு சுழற்சி உள்ளிட்டவற்றின் புத்தாக்க முயற்சி தேவையென்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

ஜிதேந்திர சிங் -2 (16)

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில் ஊடகங்களுடனான ஒரு விவாதத்தில் பங்கேற்றார். விண்வெளி புத்தொழில்களை ஆதரிப்பதற்காக ஆயிரம் கோடி மூலதன நிதியை வழங்குவது முதல், பயோ இ-3 கொள்கையை அறிமுகப்படுத்துவது வரை பிரதமர் திரு. நரேந்திர மோடியின் மூன்றாவது பதவிக்காலத்தின் முதல் 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்டதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார். இந்த முன் முயற்சிகள் இந்தியாவின் அறிவியல் வலிமையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், தொழில் துறையில் நிலையான சுயசார்பு பொருளாதாரத்திற்கும் பங்களிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். சந்திரயான்-3 போன்ற சாதனைகளில் இருந்து இந்தியா பெற்றுள்ள உலகளாவிய அங்கீகாரத்தை அவர் குறிப்பிட்டார். இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயண முயற்சியான ககன்யான் குறித்தும் அவர் எடுத்துரைத்தார். வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வானிலை இயக்கம் குறித்தும் அவர் பேசினார்.

பிரதமர் செஸ் (7)

செஸ் தரவரிசைப் பட்டியலில் 2 ஆயிரத்து 800 புள்ளிகளைக் கடந்த இந்திய செஸ் கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகைசிக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில் விடுத்துள்ள செய்தியில் இந்தியர்களை பெருமைப்படுத்துவதற்கான அவரது அசாதாரண திறமை மற்றும் விடா முயற்சியை பிரதமர் பாராட்டினார். இது பல இளைஞர்களுக்கு செஸ் விளையாடவும், உலக அரங்கில் பிரகாசிக்கவும் ஊக்கமளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கே.ஆர். நாராயணன் (4)

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனின் பிறந்த நாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, டெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். கே.ஆர். நாராயணன் இந்தியாவின் 10ஆவது குடியரசுத் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்பெயின் அதிபர் (4)

3 நாள் அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் அதிபர் திரு. பெட்ரோ சான்சஸ் இந்தியா வரவுள்ளார். நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன்

இணைந்து அவர் குஜராத் மாநிலம் வடோதராவில் உள்ள டாடா நிறுவனத்தில் சி-295 ரக விமானங்களை தயாரிப்பதற்கான வளாகத்தை திறந்து வைக்க உள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லப்பாய் படேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டா ஆகியோரின் 150ஆவது பிறந்தநாளை தேசிய அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் பெட்ரோபோலில் அமைந்துள்ள துறைமுகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் முனைய கட்டடத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று திறந்து வைத்தார்.

இந்திய ராணுவத்தின் 78ஆவது காலாட்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தையொட்டி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தியா மீதான நம்பிக்கை உலக நாடுகளில் அதிகரித்து வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / KR / RK